## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

## அசல் வழக்கு எண். 56/2023

வாதி தரப்பு சாட்சி – 1 சண்முகநாதன் திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 09.10.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டதாக பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்.381/6B என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் ராசு என்பவரிடமிருந்து கிரையம் பெறப்பட்டுள்ளதாக எனது வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தை நான் கண்ணன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்த மூல ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் நியாகம் இல்லை. ராசு கிரையம் பெற்ற ஆவணத்தில் நான்கு எல்லை எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து தாதன் பண்டிதருக்கு பாத்தியப்பட்டதாக வழக்குரையில் பத்தி 4 ல் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

2. நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.312/2005 வழக்கானது நீதிமன்றத்தால் வழக்கு கோப்பில் எடுக்காமல் திருப்பி அனுப்பப்பட்டது என்றால் நியாபகம் இல்லை. மேற்படி வழக்கை மீண்டும் தாக்கல் செய்த பின்னிட்டு அதில் தாவா சொத்து ஆண்டியப்பனுக்கு பாத்தியப்பட்டதாக தீர்ப்பளித்துள்ளது என்று எனது வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தவறுதலாக சொல்லப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் தாதன் வாரிசுகளான இரண்டு நபர்களுக்கு வாதியின் கிரையதாரர்கள் கிரையம் செய்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.312/2005 Collusive ஆக தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் ஆண்டியப்பனுக்கு ஆதரவாக தீர்ப்பு பெறப்பட்டு அதனை தொடர்ந்து ஆண்டியப்பனிடமிருந்து ரமேஷ் கண்ணன் தாவா சொத்தை தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலமாக பெற்றுள்ளதாக எனது வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால் நியாபகம் இல்லை.

3. நான் தாக்கல் செய்த வழக்கில் அசல் வழக்கு எண்.60/2000 வழக்கை பற்றி கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கில் 19 வது அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ளது தான் இவ்வழக்கின் தாவா சொத்து என்றால் நியாபகம் இல்லை. மேற்படி அசல் வழக்கில் தாதன் பண்டிதரின் வாரிசான வடிவேல் என்பவர் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் நியாபகம் இல்லை. மேற்படி எதிர் வழக்குரையில் தாவா சொத்து ஆண்டியப்பனுக்கு பாகமாக பிரிக்கப்பட்ட சொத்து என்று கூறியுள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. ராசு என்பவர் முத்துசாமி என்பவரிடமிருந்து தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். முத்துசாமி என்பவர் தாதன் பண்டிதரின் வாரிசு என்றால் சரிதான்.

4. முத்துசாமியின் வாரிசுகள் முத்துசாமிக்கு எதிராக பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பாஸ்கரன், சீனிவாசன், மகாமுனி ஆகியோர் யார் என்றால் முத்துசாமியின் வாரிசுகள் ஆவார்கள். மேற்படி நபர்கள் அசல் வழக்கு எண்.194/2021 என்ற பாகப்பிரிவினை வழக்கை முத்துசாமிக்கு எதிராக தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாதன் பண்டிதரின் மகன் முத்துசாமி என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை வழக்கில் முத்துசாமி எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கில் தாவா சொத்து தனக்கு பாத்தியப்பட்டதாக மேற்படி முத்துசாமி கட்சி செய்யவில்லை என்றால் அது பற்றி தெரியாது. தாதன் பண்டிதரின் வாரிசுகள் 1996 ல் அவர்களுக்குள் ஆவண எண்.883 என்ற ஆவணத்தின் மூலம் தரகம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பாகப்பிரிவினை செய்து கொண்ட விவரம் தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது.

5. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்திலும் தாவா சொத்து தாதன் பண்டிதருக்கு பாத்தியப்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி தெரியாது. தாவா சொத்தை டி.எஸ்.கண்ணன் என்பவரிடமிருந்து கிரையம் பெறற்ற போது வில்லங்கம் பார்த்து வாங்கினேனா என்றால் வில்லங்கம் பாத்தேன் வில்லங்கம் ஏதும் இல்லை. அதன் பின் வாங்கினேன். டி.எஸ்.கண்ணன் மேற்படி விவரத்தை என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**